883

Regd. No. M. 878.

தொகுதி 13. * பகுதி 1.

# பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை,
நாகரீகம் இவைகளைப் பரவச் செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

துந்துபி௵ வைகாசிமீ
1922௵ மேமீ

AUG 1922

## விஷயங்கள்.

1. தற்கால நிலைமை 1

2. அவதாரங்கள் 9

3. தர்மாதர்ம ஸ்வரூபம்-தர்மானுஷ்டானம் 17

4. தென் இந்தியா பிரஹ்மஞான கான்பரன்ஸ் 28

அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்.

தபால் சார்ஜ் உள்பட வருஷச்சந்தா இந்தியாவுக்கு 2—0—0
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0. தனிப்பிரதி அணு 4
மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

1922

ACL-TNAL 03466

## படங்களுடன் கூடிய கதைகள்.

| | | |
|---|---|---|
| ...ரபம்—அல்லது சட்பின் மேன்மை | | 0—2—0 |
| ...மஹாராஜ் | ஆர். எஸ். நாராயணசாமி | 0—2—0 |
| ...ராஜன — | ஐயர் பி. ஏ. பி. எல். | 0—2—0 |

## அரிய ஞானக் களஞ்சியங்கள்.

### புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை — மகாலயபக்ஷமும் நவராத்திரியும்
லோககுருவின் அவதாரங்கள் — ஸ்ரீ தேவாபி மருகுருநாதர்
ஹிந்து என்பவன் எவன் — தசாவதாரங்களின் உண்மை
காயத்திரி — எண்ணங்களின் ரகசியம்
காயத்திரி ராமாயணம் — திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.
சகோதரத்வம் — லோககுருவாகிய பரமன் வருவானேன்

நம் குழந்தைகளும் நம்தேசத்துக்கு வருங்கால மகிமையும்.
டில்லிமாநகரில் சக்ரவர்த்தியவர்களின் பட்டாபிஷேகம்.

---

### புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் இரண்டணா.

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
தியானயியால் உள்ள பிரயோஜனங்கள்
சர்வசமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷனை
மரணபயம் வேண்டாம். — சன்மார்க்கதீபம்
சத்குரு பாதங்களில். — சந்தியா வந்தனம்

### புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் மூன்றணா.

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளடாது:
(2) ஸ்தூல பிரபஞ்ச தர்மங்கள்—ஆத்ம தர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் துரவஸ்தை
(7) கர்மநாசம் (8) சின்னங்கள் (9) கர்மம்

(10) குழந்தைகளை பழக்கும் முறையில் ஜாக்கிரதை பெற்றிருக்க வேண்டிய சுருக்கமான விஷயங்கள்.

தபால் சார்ஜ் வேறு.

...னசந்திரோதயம் ஆபீஸ்
மதுரை.

21 AUG 1922

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

| தொகுதி | துந்துபி௵ வைகாசி௴ | பகுதி |
|---|---|---|
| 13 | 1922௵ மே௴ | 1 |

## தற்கால நிலைமை.

(12-ம் தொகுதி 241-ம் பக்கத் தொடர்ச்சி)

---

ஒரு ஸத்ப யுகத்திலிருந்து மற்றொரு ஸத்ப யுகத்திற்கு உலகம் செல்லும்போது நேரான கோடாகச் செல்லவில்லையென்றும் ஆனால் சுற்று மச்சுப்படி போல் செல்லுகின்றது என்றும் சொல்லலாம். மச்சுப்படிக் கட்டானது இரண்டு விதம் உண்டு. ஒன்று சாதாரணமான ஏணி போன்றது. மற்றது நடுவில் ஒருதூண் நிறுத்தி அத்தூணைச் சுற்றி முறுக்குப் போல் வளைந்து படிக்கட்டு கட்டப்பட்டிருப்பது. இது சிற்சில புதிய சர்க்கார்க் கட்டிடங்களில் காணலாம். எப்போதும் மேலே சென்று கொண்டேயிருக்கிறோம். ஆனால் நிமிஷத்துக்கு நிமிஷம் திசை மாறிக் கொண்டே போகிறோம். ஆனால் குறிப்பிட்ட இத்தனை படிக்கட்டுகள் ஏறினபிறகு முன்னிருந்த படிக்கு நேர் உயர

அதே திசையை நோக்கி நிற்கிறோம். இதனை யுகங்களின் கதிக்கு உருவகப்படுத்தலாம். பிந்திய ஸத்ய யுகத்தை மேற்படியாகவும் முந்திய ஸத்யயுகத்தை கீழ்ப்படியாகவும், கூறலாம். மத்தியில் இருக்கப்பட்ட யுகங்கள் கீழ் ஸத்ய யுகத்திற்கு உயர்ந்த நிலைமையிலுள்ளவைகளாயும், ஆனால் நோக்கும் திசையில் வித்தியாஸமுள்ளவைகளாயும் அறியலாம். அந்தப்படிகளில் அடிவைத்துத்தான் மேற்படிக்குப் போகவேண்டும். இல்லாமல் முடியாது. ஆகையால் ஒருயுகத்தையும் கெட்ட யுகம் என்று சொல்லமுடியாது. ஆனால் யுகத்துக்கு யுகம் தர்மமானது மாறும். ஸத்ய யுகத்தின் தர்மமானது ஸமஷ்டிக்கு அதில் இருக்கும் வியஷ்டி ஜீவர்கள் அடங்கி ஒற்றுமையாய் நடப்பது யுகதர்மம் போலும். கலியிலோ ஒவ்வொரு ஜீவனும் தன்னுடைய உரிமையையும் அதிகாரத்தையும் பாராட்டுவது யுகதர்மம் போலும். மனத்தத்துவம் அதாவது வேற்றுமை பாவம் கலியில் மனிதர்களுக்கு அதிகம் போலும். புத்திதத்துவம் அல்லது ஒற்றுமை பாவம் ஸத்யத்தின் சுபாவம் போலும். ஸத்ய யுகத்தில் தபஸ் வெகுகாலம் செய்யவேண்டும் என்றும் கலியில் குறுகிய காலம் செய்தாலும் சீக்கிரம் பலனைத்தரும் என்றும் புத்தகங்களில் படிக்கவில்லையா? அதின் உண்மையென்ன? மனிதன் விகாஸமுறையில் கலியில் அபிவிருத்தியடைந்திருக்கிறான் என்பது விசதமாக வில்லையா? அதாவது முன்னரைக் காட்டிலும் மனிதனுக்கு சக்தி அதிகம். ஆகையால் அவன் கொஞ்ச காலத்திற்கு தபஸ் செய்தாலும் மிகுந்த பலனை அடைகிறான். ஆகையால் கலியில் ஞானிகள் மிகவும் ஆவலுடன் பிறக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

***

ஆகவே ஸத்யயுகத்தில் பெரியவர்கள் சொன்ன வார்த்தையென்றுஒருவர்சொல்லக்கேட்டாலும்அதைகீழ்படிந்து மறுபேச்சில்லாமல்செய்வான்என்றுசொல்லலாம். கலியிலோ

ஈசுவரனே நேரில் வந்து சொன்னாலும், சொன்னதற்காகச் செய்ய மாட்டான். ஆனால் புத்திக்கு ஏற்றுக்கொள்ளும்படி காரணங்களைச் சொன்னால் அப்போது தான் செய்வான். அப்போதும் தன் இந்திரியங்களாலும் காமாதிகளினாலும் இழுக்கப்பட்டு, சரியென்றும் செய்யவேண்டியதென்றும் தோன்றுகிற காரியங்களையும் செய்யமாட்டேன் என்று சொல்லலாம். ஆகையால் இப்படி யுக சுபாவத்தை அறியவேண்டும். யுகத்திற்கு ஏற்றபடி செய்யவேண்டிய கர்மங்களும் மாறும். அவைகளை மானிடர்கள் செய்யும்படி தூண்டும் தூண்டுகோல்களும் மாறவேண்டும்.

***

ஆனால் எல்லா யுகங்களுக்கும் நோக்கம் ஒன்றே. அது என்னவெனின், மனிதன் வரவர விகாஸமுறையில் முன்னேறவேண்டியது. அவன் மனம் சுத்தமாக வேண்டியது. அவன் சக்தி யதிகரிக்கவேண்டியது. அவன் ஜீவன் முக்தி தசையையடைய வேண்டியது. ஒரு காலத்தில்பிராஹ்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் யாவரும் மாமிச போஜனம் செய்து வந்தனர். ஒரு காலத்தில் ஜீவபசுக்களை யாகங்களில் பலிகொடுப்பது வழக்கமாயும் நியாயமாயும் இருந்தது. ஆகையால் இக்காலத்திலும் எல்லோரும் மாமிச போஜனம் செய்கிறவர்களாய் இருக்கவேண்டும் என்று சொல்ல முடியுமா? கலியில் ஜீவபசுக்களை வதை செய்யும் யாகங்களைச் செய்யவேண்டிய அவசியம் என்றும் சொல்லமுடியுமா? நமது தர்மசாஸ்திரங்களை ஆராயுங்கால், தேசங்களுக்கும், காலங்களுக்கும் தக்கபடி ஆசாரங்கள் மாறும் என்பது நன்று கூறப்படுகின்றது. கலியில் யாகங்கள் செய்யவேண்டியதில்லையென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. ஒருகாலத்தில் அவசியம் யாகம் செய்யவேண்டும் என்றும் அதன் பலனை மிகவும் உத்கர்ஷமாகக் கூறப்படுகின்றது. இன்னொரு புஸ்தகத்தில் கூடாதென்று சொல்லப்படுகிறதே இரண்டையும் ஸமரஸப்படுத்துவது எங்ஙனம்? யாகம்

நடக்கும்போது யார் என்ன வந்து கேட்டாலும் மறுக்காமல் கொடுக்கவேண்டும், என்றும் மறுத்தல் அது நிஷ்பலனாகப் போய்விடும் என்றும் சொல்லப்படுகிறது. ஆகையால் இக்காலத்திலும் ஜீவபசுக்களைக் கொல்லும் யாகங்கள் தவிர்க்கப் பட்டாலும் உலகக்ஷேமத்தின் பொருட்டு தன் பொருளைப் பிறருக்கு அர்ப்பணம் செய்து உதவுவதே யாகம் ஆகும் என்று சொல்வது ஒருவாறு அமையலாம் என்று தோன்றுகிறது. ஒருவன் எந்த ஆகாரம் உட்கொள்கிறானோ அதையே அவன் ஆராதிக்கும் தேவதைகளும் உட்கொள்ளுகிறார்கள் என்று பகவான அருளிச் செய்கிறார். ஆகின் மூன்று மேல் வருணத்தாரும் ஊன் உண்ணும் வழக்கத்தாராய் இருந்த சமயத்தில், அப்படிச் செய்வதாயிருந்தால் யாகம் செய்து ஊன் உண்ணவேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் பிராமணரும் மற்ற வருணத்தாரில் பலரும் ஊன் உண்ணா விரதம் பூண்டொழுகும் தற்காலத்தில் அவர்களும் யாகம் செய்யவேண்டும் என்பது அவ்வளவு பொருந்தாது என்று சொல்லலாம்.

***

இம்மாதிரியே அனேக விஷயங்களில் யுகதர்மமான து வேறுபாடுள்ளது என்று அறிவோமேயானால், வீணே காலம் கெட்டுப்போய் விட்டது என்று சொல்லிக்கொண்டு, காலம் கழிக்காமல் உற்சாகத்துடனும்) தீர்க்கத்துடனும் இக்காலத்தில் எந்த எந்த முயற்சிகள் நன்மை பயக்கத்தக்கவை யென்று துணிந்து அவைகளில் நாம் ஊக்கமுடையவர்களாயிருக்கலாம். இவ்விதமான மனோபாவமே சிறந்தது என்றும் தேசத்திற்கும், தனக்கும் நன்மை பயக்கத் தக்கது என்று நாம் சொல்லத்துணியலாம். ஸ்திரீகளின் கல்வி விஷயமாயும், அவர்களுக்கு சுதந்திரம் கொடுக்கும் விஷயமாயும், தீண்டா ஜாதியாரின் முன்னேற்ற விஷயமாயும், இன்னும் இது போன்ற விஷயங்கள் சம்மந்தமாயும், நம்முடைய மனோபாவங்களைத் திருத்தி யமைத்தல் அவசியமாகிறது,

அப்படித் திருத்தியமைத்தல் சச்சரவும் போராட்டமும் தன்மையாயுள்ள இக்கலிகாலத்தில் எங்ஙனம் அப்போராட்டத்தினுடையவும், சச்சரவையும் முனை மழுங்கச் செய்து எப்படி ஜனலாபத்தையும் அதிகப்படுத்தலாம் என்பது நமக்குத்தோன்றும். எப்போதும் சென்ற நாளே நல்ல நாள் என்று வருந்தாமல், வருங்காலமானது சென்ற காலத்தைவிட மேன்மையுள்ளதாக இருக்கலாம் என்ற நம்பிக்கையும், அதனால் உண்டாகும் ஊக்கமும் நமக்குண்டாகும். இதுவே சரியான மனதின் தன்மை என்று தெரிவிக்கிறோம்.

***

இயற்கையாகவே குழந்தையின் மனதைப்போல் பிறரை நம்பிக்கொண்டு, யஜமான் உத்திரவு, என்ற வார்த்தையுடன் தொழிலாளிகள் இருந்தகாலம் நமக்குத்தெரியும், அவர்களுக்கு எஜமானன் வார்த்தையில் தேவதாவிசுவாசம். அக்காலம் போய்க்கொண்டுவருகிறது. தொழிலாளிகள் தாம் ஒன்று சேர்ந்தால் முதலாளிகளையும் ஜனசமூகத்தையும் தம் வசப்படுத்தலாம் என்று எண்ணத் தலைப்பட்டுவிட்டார்கள். தாங்கள் கூட்டம் கூடிவேலை நிறுத்தம் செய்தால் தம்முடைய இன்றியமையாத தன்மையை பிறரை உணரும்படி செய்யலாம் என்று கொஞ்சம் உணர்ந்திருப்பதினால் இந்நாட்டிலும் நாள் தவறாமல் வேலை நிறுத்தங்களைப் பற்றிக்கேள்விப்படுகிறோம். இச்சமயத்தில் எல்லோரும் மனதில் வைக்கவேண்டிய நியாயம் யாதெனில், தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும், ஜனஸமூகத்துக்கும் பரஸ்பரிசியத்துவம் ஒன்றுள்ளது என்றும், போராட்டத்தை மட்டும் அதிகரித்து தமது லாபத்தை மட்டும் பாராட்டுவது அதர்மம் என்றும் உணர்த்தி, சமாதானம் நிகழும்படி செய்வதேயாகும், ஆகவே கலியில் கிருதயுகதர்மத்தை நிலைநிறுத்தும்படி இப்பொழுதே முயல முடியும், அப்படி முயல்வதே முறையாகும்.

இவ்வாறே நம்முடைய தேசமும் மற்ற தேசங்களும் சமாதானமாய் வாழவேண்டியதற்கு ஏதுவான முறைகளிலேயே நாம் புத்தியைச் செலுத்தவேண்டும் என்றால் நம்முடைய உரிமைகளையாவது ப்ராத்தியங்களையாவது இழக்க வேண்டுமென்பது அல்ல, ஆனால் சமாதானம் நிகழக்கூடிய முறையிலேயே நடத்தல் நியாயமாம். துவேஷத்தைக் குறைக்கவும் நேசத்தை அதிகரிக்கவும் முயலும் சபைகளிலும், சங்கங்களிலும், நாம் அநுதாபம் காட்டிவரவேண்டும், நம்முடைய மனதினால் சர்வே ஜனா: சுகினோபவந்து என்று தீவிரமாய் சங்கற்பிக்கவேண்டும்.

***

உலகத்தின் ஒற்றுமையையே தம் நோக்கத்தில் கொண்டு பிரஹ்மஞானசபைத் தலைவர்கள் வற்புறுத்துகிறார்கள். அவ்வொற்றுமையில் ஒவ்வொரு தேசமும் ஒவ்வொரு ஜாதியாரும் ஒரு அங்கமாய் இருப்பதாயும், ஒவ்வொரு அங்கமும் தான் அங்கியாகிய முழுமைக்கும் ஒத்திருக்கும்படி அமையவேண்டும் என்றும், அதற்காகவே எல்லோரும் முயலவேண்டும் என்றும் கூறுகிறார்கள். பிரஹ்மஞான சபையைச் சேராத கவீந்திரராகிய ரவீந்திரநாததாகூர் அவர்களும் அங்ஙனமே கூறுகின்றனர். ஆகவே வேற்றுமை பாவம் குறையவும் ஒற்றுமை பாவம் ஓங்கவும் உழைப்போமாக.

***

ஒத்துழையாமை இயக்கத்துக்குத் தலைவராக விளங்கும் ஸ்ரீ காந்தியவர்கள் நம் நாட்டிலுள்ளோராலும் ஏனைய நாட்டாரின் பலராலும் மிகவும் பரிவுடன் பாராட்டப்பட்டவர்கள். அவரை ஒருசமயம் மிகவும் சிறப்பாகக் கூறி மெச்சிப் புகழ்ந்தவர்களில் மாதுஸ்ரீ பெஸண்டம்மையவர்கள் முதன்மையானவர்கள். தற்போது அவரது கொள்கையைக் கடிந்து அவருக்கு முதல் எதிரியாக விளங்கு

பவரும் மாதஸ்ரீ அவர்களே, ஆகையால் நமது மாதஸ்ரீ அவர்களுடைய அபிப்பிராயத்தை நேயர்கள் அறிய விருப்புவது இயல்பே. ஆதலின், இந்தியன் ஸெக்ஷனில் முன்னொரு சமயம் ஜனரல் செகரிடெரியாயிருந்தவரான பாபு உபேந்திரநாத வஸு என்பவர் பிரம்ஞான சபை அங்கத்தினருக்கு எழுதிய நிருபத்தையும் அதற்கு டாக்டர் பெஸண்டம்மையவர்கள் விடுத்த உத்தரத்தையும் பற்றி இங்கு எழுதுகிறோம்.

***

பாபு உபேந்திரநாதவஸு அவர்கள் எழுதவதாவது: முன்னொரு சமயம் என்னுடைய சிறந்த நண்பரும் உலகப் பிரசித்தி பெற்ற உபந்யாசகருமான டாக்டர் பெஸண்டம்மையவர்கள் நியூ இந்தியாப் பத்திரிகையில் அடியிற் கண்டபடி எழுதினார். அது உண்மையான விஷயம். அது என்மனதை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தியது. அதை நான் பிரம்மஞான சகோதரர்களுடைய ஞாபகத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. பூவுலகைப் புனிதப்படுத்தும் புண்ணிய புருஷனான காந்தியடிகளைப்பற்றி தெய்வீகப் புலமைவாய்ந்த அவ்வம்மையின் உண்மை நிறைந்து ஒளிரும் அருமையான வார்த்தைகள் வருமாறு.

***

தற்காலத்தில் பூவுலகில் ஓர் புண்ணியாத்மா விளங்குகிறார். அவர் சன்னதியில் நிற்பதே பரமபாவனமாகும். அவர் தன் அடிச்சுவடுவைக்கும் கிரகங்களே பரிசுத்தமாகின்றன. அவர் பெயர் தான் காந்தி அவர் ரிஷிதுல்யர், அவரே தீரபுருஷன். அவர் முன் ஜன்மங்களினின்று கொணர்ந்த சிறந்த குணங்கள் எதற்கு மஞ்சாத பொறுமையுடன் கூடிய சளைக்காத தைரியமாகவும், பரித்தியாகத்திலேயே களிக்கும் தன்னய மறுத்தலாகவும், அன்புடனும் இனிமையுடனும் கலந்த பொறுமையாகவும் பரிணமிடும் வண்ணம், சந்தர்ப்பங்கள் வாய்க்கப்பெற்றது மிகவும் ஆச்

சரியமான காரியம். நானும் இவரும் கைத்தலம் இணைந்து நின்றபோது, தான் கஷ்டப்படுவதால் பிறரை உய்விக்கிறதும், தான் துன்பத்தை ஏற்றுக்கொள்வதால் உலகத்தை ஈடேற்றுவதுமான மேன்மையான தன்மையை இவரிடம் கண்ணுற்றேன். உலகரக்ஷகர்களும் மனித வர்க்கத்தினரின் உத்தம சகோதரர்களும் இத்தன்மையவர்களினின்றல்லவோ, தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். என் வழியே இவர் வழியல்ல. என் மார்க்கம் க்ஷத்திரிய மார்க்கம். பக்திமார்க்கமல்ல. ஆக்கம் பெற்ற அதர்மத்தைத் தாக்கி அடக்குவது என் முறை, பயந்து எதிர்ப்பதல்ல. இவ்வளவு துர்பலமுள்ளவர்போல் தோன்றினும் மிகுந்த சக்தி வாய்ந்தவரான இவ்வுத்தமர் இனி உலகத்தை ரக்ஷிக்கும் மகான்களில் ஒருவராய் ஆவார் என்று துணிவுடன் கூறுவேன். அன்னாரைப்பற்றி யல்லவோ "இவர் பிறரை ரக்ஷித்தார். ஆயினும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளமுடியவில்லை." என்று கூறப்பட்டுள்ளது.

***

ஆச்சரியகரமான உள்ளுணர்வும் அனுதாபமும், சக்தியும் வாய்ந்த தீர்க்க தர்சனமுள்ள வார்த்தைகள் ஈது! அவைகளை பிரஹ்மஞான சபைத்தலைவர் உரைத்த போது அவரது அந்தராத்மாவினால் சகோதரமான மற்றொரு ஆத்மாவை உண்மையாய்ப்பார்த்து உணர்ந்ததாக எண்ணுகிறேன். ஸ்ரீமான் காந்தியின் வழியை அனுசரிக்க வேண்டியதில்லை அவர் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டியதும் இல்லை. ஆனால் அவ்வுயர் நலம் வாய்ந்த பெரியவரைப் பற்றி தவறான எண்ணங்களைக் கொள்ளாமல் இருத்தல் பொருட்டு மேற்கூறிய நம் தலைவரின் வார்த்தைகளை ஞாபகத்திருத்து வோமாக! பிறகு அவரைப்பற்றி நம்முடைய தேர்ந்த அபிப்பிராயத்தைக் கொள்வோமாக! (தொடரும்)

ஆர். அரங்கசாமி ஐயர்.

## அவதாரங்கள்.

(12 ஆம் தொகுதி 272-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

இதற்குப் பிறகு பரசுராமருடைய அவதாரம் வருகின்றது. பரசுராமருடைய அவதாரத்தை ஆவேசமென்றே சொல்லலாம். க்ஷத்திரிய ஜாதியானது தலையெடுத்து ஓங்கி லோகத்தை ஆண்டு கொண்டிருந்தது. ஆனால் அது தன் அதிகாரத்தை ஜனங்களுக்கு நன்மையை உண்டாக்கும் விஷயத்தில் செலுத்தாமல், ஜனங்களுக்கு ஹிம்ஸையை யுண்டாக்கும் வழியில் உபயோகித்தது. ஆகையினால் க்ஷத்ரிய ஜாதிக்கே ஓர் பாடத்தைக் கற்பிக்க வேண்டியதாயிருந்தது. அப்பொழுது பகவான் பரசுராமரிடத்தில் தன்சக்தியை வைத்து, அவர்வழியாக, க்ஷத்திரியப் பூண்டேயில்லாமல், இருபத்தொரு தலை முறைகள் வரையில் வேரறுத்தார்.

பரசுராமரிருக்கும் பொழுதே மற்றொரு அவதாரம் பகவான் பண்ணினார். க்ஷத்ரியர்கள் எப்படி நடக்கவேண்டும் என்பதையும் எப்படி ஆள வேண்டியது என்பதையும் லோக ஜனங்களுக்கு நடத்திக்காட்டுவதற்காக, பகவான் ராமரூபியாய் அவதாரம் பண்ணினார். இராமசந்திர மூர்த்தியானவர் ஜானகியை விவாஹம் பண்ணிக்கொண்டு அயோத்திக்குத் திரும்பிவரும் வழியில், பரசுராமரை சந்திக்கிற சமயத்தில், பரசுராமரிடத்தில் வைக்கப்பட்டிருந்த விஷ்ணு சக்தியானது ராமசந்திர மூர்த்தியினிடத்தில் சென்றது. பரசுராமரால் செய்யப்படவேண்டியிருந்த காரியமானது முடிந்ததும், விஷ்ணு சக்தியானது ராமரால் நடக்கவேண்டிய காரியம் நிறைவேறுவதற்காக, அவரிடத்தில் சென்றது. விஷ்ணு சக்தியானது தன்னிடத்திலிருந்து ராமசந்த்ர மூர்த்தியினிடத்தில் பாய்வதை உணர்ந்து பரசுராமரானவர் ராமசந்திர மூர்த்தியை வணங்கினர்.

வணங்கிவிட்டு அவர் தன்னிருப்பிடஞ் சென்றார். எந்த மனிதனிடத்தில் பகவானுடைய சக்தியானது வைக்கப் பட்டிருந்ததோ, அந்த மனிதன் உயிரோடிருந்த போதி லும், அவனிடத்தில் விளங்கின பகவத் சக்தியானது எடுக் கப்பட்ட பிறகு, மனிதன்மட்டும் மிகும் பக்ஷத்தில் அந்த அவதாரத்தை முழு அவதாரம் என்று சொல்வதற்கு நியா யமில்லை. ஆகையினால் பாசுராமருடைய அவதாரமானது சிறிய அவதாரமே.

ராமாவதாரத்தைப் பற்றி எல்லாருக்குந் தெரிந்த விஷயமே. அவர் க்ஷத்ரிய தர்மத்தை லோகத்துக்கு நடத்திக் காட்டுவதற்காக அவதரித் தவர். ஒவ்வொரு விஷயத்திலும் க்ஷத்ரியர்கள் நடந் து கொள்ளவேண்டிய விதத்தை அனுஷ்டித்துக் காட்டி னார். அரசர்கள் நடந்துகொள்ள வேண்டிய விதத்தையும் சகோதரன் சகோதரர்களிடத்தில் நடந்துகொள்ள வேண் டிய விதத்தையும், மனிதன் தன் ஸ்நேகிதர்களிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய விதத்தையும், பாரியை இடத் தில் பர்த்தா நடந்துகொள்ள வேண்டிய விதத்தையும் அர சன் பிரஜைகளிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய விதத் தையும், ஒன்று விடாமல் எல்லாவற்றையும் தெளிவாய் நடத்திக் காட்டினார்.

## கிருஷ்ணாவதாரம்.

அடுத்தபடி கிருஷ்ணாவதாரம் வருகிறது. எல்லா அவதாரங்களுக்குள்ளும் கிருஷ்ணாவதாரமானது நிரம்பவும் முக்கியமான அவதாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய அவதார ரகஸ்யத்தைப் பற்றி ஸரியாய் அறிவதற்கு நமக்கு சக்தியில்லை. ஸரியாய் கிரஹிக்காத பக்ஷத்தில் அநேக தப்பு அபிப்பிராயங்களுக்கு இந்த அவ தாரத்தில் இடமிருக்கிறது.

மஹா தேவருடைய மஹிமைகளும், ஸ்மசானத்துக்கு யஜமானனாகிய ருத்ரமூர்த்தியினுடைய மஹிமைகளும், லோக விஷயங்களில வெறுப்பை யடைந்தவர்களுடைய வும், லோகவிஷயங்களில் பரமவைராக்ய மடைந்தவர்களுடையவும், நிவிருத்தி மார்க்கத்தில் அதிதீவிரமாய் வேலை செய்கிறவர்களுடையவும் ஹிருதயங்களையே அதிகமாய் இழுக்கும். ஆனால் கிருஷ்ண பகவானானவர் ஸகலவிதமான ஜனங்களுக்கும் ஆநந்தத்தைக் கொடுப்பவர். ஒவ்வொரு விதத்திலும் ஜனங்களை மோஹிக்கவும் ஸந்தோஷிக்கவும் செய்கிறவர். எந்த விதத்திலும் மனிதர் மாதிரியே நடித்துக் காட்டினவர். குழந்தையாயிருக்கும் பொழுது, சிரம்பவும் விளையாட்டுக் குழந்தையாயிருந்து, ஸகல ஜனங்களையும் மோஹிக்கச் செய்தார். யௌவனபருவத்திலும் புருஷத்துவத்தாலும், மனிதர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் எல்லோரையும் மோஹிக்கச் செய்தார். அவரிடத்தில் எப்பொழுதும் ஸந்தோஷமும் உற்சாகமும் ஸங்கீதமும் குடி கொண்டிருக்கும். எந்த விதத்திலும் மனிதனைப்போலவே நடித்துக் காட்டினார். தாயாரிடத்தில் குழந்தைகள் நடக்கிற மாதிரியும் குழந்தையானது விளையாட்டுத் தோழர்களிடத்தில் நடக்கிற மாதிரியும், நாயகன் நாயகியிடத்தில் நடப்பது மாதிரியும், எந்த விதத்திலும் மனிதன் மாதிரியே நடித்தார். அதனால் தான் ஸகல ஜீவகோடிகளையும் மோஹிக்கச் செய்தார். ஒவ்வொரு அவதாரத்தையும் இரண்டு விதமாய் நாம் பார்க்கவேண்டும். முதலில் சரித்திரமாகவே அதை நாம் பாவிக்கவேண்டும். அவதாரத்தைப் பற்றின கதைகள் கட்டுக்கதைகளல்ல. லோகத்தில் நடந்த சரித்திரமே. அவதார புருஷரானவர் லோகத்தில் ஓர் பெரிய நாடகம் போடுகிறார். அந்த நாடகத்தில் அவர் நடிக்கிறார். அந்த நாடகத்துக்கு வெளிப்படையான சரித்திரார்த்தம் ஒன்றிருக்கும். மற்றொன்று, ஆத்மாவைப் பற்றின உண்மையை விளக்கும் படியான ரகஸ்யார்த்தம். அநேக ஆத்ம தத்துவங்களை விளக்கிக்காட்டுவதற்கு ஓர்

பரிபாஷையாயிருக்கும். அதை ஆராய்ந்து தோண்டிப் பார்க்கும் சக்தியுள்ளவர்களுக்கு அதிலிருந்து அநேக ஆத்ம ரகஸ்யங்கள் வெளிப்படும். ஆகையினால் அவதாரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆரம்பிக்கும் பொழுது, மேலே சொல்லப்பட்ட இரண்டு விஷயங்களையும் நாம் மறக்கக்கூடாது.

அவர் அவதாரம் பண்ணவரும் பொழுது அவரோடு ஸம்பந்தப்பட்ட அநேகம் பேர்கள் அவரோடு கூட வருவதுண்டு. எந்த அவதாரத்திலும் இப்படியே நாடகத்தை ஸரியாயும் பூர்ணமாயும் நடித்துக் காட்டுவதற்கு ஒருவர் வந்தால் மட்டும் போதாது. அவரோடு ஸம்பந்தப்பட்ட அநேகம் பேர்கள் வந்து, கூட நடித்துக்காட்டினால் தான் நாடகம் பூர்த்தியாகும். இந்த நாடகத்தின் கருத்தை பூர்ணமாய் நாம் அறிவதற்கு, அதை அநேகம் வகுப்புகளாகப் பிரிக்கவேண்டும். பிரித்து, ஒவ்வொன்றிலும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்று நாம் பார்க்க வேண்டும்,

1. முதல் முதல் ஜனங்களுக்கு ஓர் விதமான பக்தியைக் கற்பிக்க அவர் வந்திருக்கிறார். பக்தன் பகவானிடத்தில் நடந்து கொள்ளவேண்டிய விதத்தையும் பகவான் பக்தனிடத்தில் நடந்து கொள்ளுகிற விதத்தையும் லோகத்துக்குக் காட்ட வந்திருக்கிறார்.

2. பகவானுடைய நியமனத்துக்கும், இச்சைக்கும், விகாஸமுறைக்கும் விரோதமாயிருக்கிற சக்திகளை நாசஞ் செய்வது மற்றொரு கருத்து.

3. மந்திரியாகவும் ராஜதந்திரியாகவும் இருந்து ராஜ்ய வியவஹாரங்களை புத்தி சாதுர்யத்தால் ஸரியாய் நடத்தி வைத்தார்.

4. ஸ்நேகிதனா யிருப்பது. பாண்டவர்களுக்கு ஸஹாய மாயிருத்தல். அர்ஜுனனிடத்தில் விசேஷமாய் அபிமானம் வைத்திருந்தார்.

5 பகவத் கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்த படியால், ஜகத்குருவாய் விளங்குகிறார்.

6. மனிதர்களுடைய ஹிருதயத்தை பரிசோதித்தார்.

7. விசுவரூப தர்சனத்தைக் காட்டி, ஸகல பிரபஞ்சத்தையும் தன்னிடத்தில் அடக்கிக் கொண்டிருப்பதைக் காட்டினார்.

இவ்வாறு கிருஷ்ண பகவானுடைய அவதாரத்தை ஏழு வகுப்புகளாகப் பிரிக்கலாம். அவைகள் ஒவ்வொன்றையும் எடுத்துக் கொண்டு நாம் தெரிந்து கொள்வது என்னவென்று நன்றாய் ஆழ்ந்து பார்க்கவேண்டும்.

அவர் அவதரிப்பதற்கு முன்னமேயே தேவர்கள் விஷ்ணு விடத்திற்குச் சென்று பூபாரத்தை நீக்கும்படியாக வேண்டிக்கொண்டார்கள். அதற்கு விஷ்ணுவானவர் தேவர்களை நோக்கி, நீங்கள்போய் மனிதர்களாகப் பிறவுங்கள் என்று ஆக்ஞாபித்தார். விஷ்ணுவானவர் அவதரித்த இடத்தில் பெரிய பெரிய ரிஷிகள் ஜன்மம் எடுத்தார்கள். ஆகையினாலே அவர் வருவதற்கு முன்னமேயே நாடகம் நடக்க வேண்டிய இடமும் நாடகத்தில் நடிக்கவேண்டிய பாத்திரங்களும் தயாராக்கப்பட்டன.

கோகுலத்தில் வஸித்த கோபாலர்களும், நந்தகோபரும், அவரைச் சுற்றியுள்ளவர்களும், கோகுலத்தில் வஸித்த எல்லோருமே ஸாதாரணமான மனிதர்களல்ல. அவர்கள் எல்லோரும் லோகத்தை பாலனம் பண்ணப் பட்டவர்கள். லோக நன்மைக்காக பகவானுடைய அவதாரத்தைப் பூர்த்தி செய்வதற்காக மனித ஜன்மம் எடுத்த

மஹா புருஷர்கள். ஆகையினால் கோகுலத்தில் கிருஷ்ண பகவானோடு நடித்த மனிதர்களும் ஸ்திரீகளும் ஸாதாரண மனிதர்களும் ஸாதாரண ஸ்திரீகளுமல்ல. லோகத்தை பாலனம் பண்ணுகிறவர்கள் கோபாலர்களாகவும் கோபிகை களாகவும் பிறந்தார்கள். கோபிகைகள் பழைய காலத்து ரிஷிகள். பகவானிடத்தில் அன்பையும் பிரியத்தையும் செலுத்தவேண்டு மென்று ராமாவதாரத்தில் கேட்டுக் கொண்ட ரிஷிகளே கோபிகைகளாய் அவதரித்தார்கள்.

இப்படிப்பட்ட ஆபத்தம் செய்யப் பட்டவுடன், பகவான் ஜனித்தார். வஸுதேவரானவர் கோகுல த்துக்குச் சென்று நந்தகோபருடைய கிருஹத்தில் குழந்தையைக் கொண்டுபோய்விட்டார். ஆகையினால் தயார் செய்யப்பட்ட இடத்திற்கு பகவான் வந்து சேர்ந்து விட்டார். பாலனாயிருக்கும் போதே அநேக கெட்ட ஜந்துக் களையும் கெட்ட துராத்மாக்களையும் நாசஞ் செய்தார். நந்தகோபருடைய கிருஹத்தில் அவர் விநோதமாய் விளை யாடுவதையும், கோகுலத்திலும் கோபாலர்களுடைய கிருஹங்களிலும் அவர் விளையாடுவதையும் விளையாட்டுத் தோழர்களோடு அவர் விளையாடுவதையும் பாருங்கள்! பாலனாக வளர்ந்ததும் காடுகளிலும் வனங்களிலும் நதி தீர ங்களிலும் கட்டுப்பாடில்லாமல் ஸஞ்சரித்து விளையாட ஆரம்பிக்கிறார். வேணு கானம் பண்ணி, ஸகல கோபிகை களையும் கோபாலர்களையும், கோக்களையும் கன்றுகளையும் மோஹிக்கச்செய்ய ஆரம்பிக்கிறார். கோபிகைகளும் கோபா லர்களும் அவரவர்களுடைய வேலைகளை விட்டு விட்டு பரவச மாகவே அவரிருக்கிற இடத்திற்கு ஓடி வருகிறார்கள். அவருடைய வேணு கானத்தைக் கேட்டதும், பெண்கள் தங்கள் வீட்டு வேலைகளை மறந்து விடுகிறார்கள். வீட்டு வேலைகளை விட்டு விட்டு அவரிருக்கிற இடத்திற்கு மெய் மறந்து ஓடிவருகிறார்கள். மனிதர்கள், ஸ்திரீகள், குழந் தைகள், இவர்களைத் தவிர, கோக்களும் கன்றுகளும்

அவருடைய கானத்தைக் கேட்பதற்காக புற்களை மேயாமல் காது கொடுத்துக் கொண்டிருந்தனவாம். கன்றுகள் அதைக் கேட்டதும் தாயினுடைய பாலைக்குடிப்பதை நிறுத்தி விடுமாம். பக்ஷிகள் பாடுவதை நிறுத்தி விடுமாம். மரங்கள் தங்களுடைய கிளைகளை கீழே தாழ்த்திக் கொள்ளுமாம். நதியானது சப்திப்பதை நிறுத்தி விடுமாம்.

இப்படியாக, கோகுலத்தில் விளையாடிக் கொண்டு ஸகல கோகுலவாஸிகளையும் மோஹிக்கச் செய்து கொண்டு பால்யப் பருவத்தைக் கழித்தார். கோபாலர்கள், கோபிகைகளாகிய எல்லோருடைய ஹிருதயங்களும் அற்புதமான அக்குழந்தை யிடத்தில் பாய்ந்தன. அவர்களுக்கு அவர் விளையாட்டாகவே அநேக அற்புத விஷயங்களைக் கற்பித்தார். அப்படிப்பட்ட பாடங்கள் ஜனங்களுக்கு எக்காலத்திலும் உபயோக மாகவே யிருக்கும்.

அவைகளில் ஒன்றை இப்பொழுது உதாரணமாக எடுத்துச் சொல்வோம். பகவானுடைய மஹிமையையும் அவருடைய அவதாரத்தின் ரகஸ்யத்தையும் அறியாத மூடாத்மாக்கள் அதைத தூஷணையாகச்சொல்வதுண்டு. எவரெவர்கள் தூஷிக்கிறார்களோ, அவர்களெல்லாம் ஆழ்ந்து வாசித்துப் பார்க்காதவர்களே. அவர்கள் எல்லாரும் நுனிப் புல் மேய்கிறவர்களே, கொஞ்சம் அரை குறையாய் வாசித்து விட்டு, மற்றவைகளைத் தாங்களாகவே கற்பனை செய்து கொள்ளுகிறவர்களே, கிருஷ்ண பகவானைப்பற்றித் தூஷணையாய்ப் பேசுகிறர்வகளுக்கு ஆதாரமாயிருப்பவைகளில் மிகவும் முக்கியமானவைகளைப் பற்றி நாம் இப்பொழுது பேசுவோம்.

ஆறு வயதுள்ள குழந்தையாயிருந்த பகவான் ஒரு நாள் வழக்கம்போல் அலைந்து திரிந்து கொண்டிருந்த ஸமயத்தில், அநேக கோபிகைகள் நிர்வாணமாக நதிஜலத்தில் ஸ்நானம் செய்து கொண்டும் விளையாடிக்கொண்டு

மிருந்தார்கள். அவர்கள் இந்தக்காரியத்தை ஒருபொழுதும் செய்திருக்கக்கூடாது. ஏனென்றால் பெண்களுக்குஸ்வபாவமாயிருக்கவேண்டிய நாணத்தின் இன்மையைக் கண்டிப்பது அவசியமன்றோ? தங்களுடைய ஆடைகளை நதிக்கரையில் வைத்துவிட்டு, நதியில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தார்கள். ஆறுவயதுள்ள குழந்தையானது இதைப்பார்த்தது. அவர் உடனே ஆடைகள் எல்லாவற்றையும் சுருட்டி எடுத்துக்கொண்டு பக்கத்திலுள்ள மரத்தின் பேரில் ஏறிவிட்டார். ஜலமானது நிரம்பவும் குளிர்ந்திருந்தது. கோபிகைகள் குளிரால் விறைத்து நடு நடுங்கினார்கள். அவர்கள் குழந்தையிருக்கு மிடத்திற்கு வர வெட்கப் பட்டார்கள். அவர் மரத்தின் பேரில் உட்கார்ந்து கொண்டு தன்னிடத்தில் வந்து ஆடைகளை வாங்கிக் கொள்ளும்படி சொன்னார். அவர்கள் தயங்கிக்கொண்டிருந்த ஸமயத்தில், பகவானானவர் அந்த கோபிகைகளை நோக்கி, "ஆடைகளை எடுத்து எறிந்ததினால் பகவானிடத்தில் நீங்கள் ஓர் பெரிய குற்றத்தைச்செய்து விட்டீர்கள். அந்தக் குற்றத்துக்கு தண்டனையாக என்னிடத்திற்கு நீங்களே வந்து என்னுடைய கையிலிருந்தே நேராக உங்களுடைய ஆடைகளை வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார். அவர்கள் அப்படியே அவரிடத்திற்கு வந்து ஸ்தோத்ரம் செய்தார்கள். அவர்களுடைய ஆடைகளை அவர் அவர்களிடத்திலேயே திருப்பிக் கொடுத்து விட்டார். இது தான் ஓர் கெட்ட கதை. ஆறு வயது குழந்தையால செய்யப்பட்டகாரியம் வயது சென்ற ஓர் மனிதன் செய்து விட்டால் ஜனங்கள் எப்படி மதிப்பார்களோ, அந்த மாதிரி ஆறுவயது குழந்தை செய்த காரியத்தையும் மதிக்கிறார்கள். கோபிகைகள் (ஏற்கனவே சொன்னமாதிரி) பழைய காலத்து ரிஷிகள் பகவான் குழந்தையாக விருந்து கொண்டு, அவர் ஓர் பாடத்தை அவர்களுக்குக்குக் கற்பிக்கிறார். ஆத்மவித்தையில் நிரம்பவும் ரகஸ்யமான பாடங்களில் இது ஒன்று. இந்தக்கதையைத்தான் அநேக விதமாக மாற்றிச் சொல்வதுண்டு.

(தொடரும்.)

கோடீசுவரய்யர்.

## தர்மாதர்ம ஸ்வரூபம்-தர்மானுஷ்டானம்.

பிதாதனது குழந்தைகளை நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வரவேண்டுமென்று ஸதா பாடுபடுவது போல் தயா நிதியான ஈசுவரன் எல்லா ஜீவகோடிகளின் பாபங்களையும் கர்மங்களையும் நாசஞ்செய்து கொண்டு, அவர்கள் சித்த சுத்தியை அடைந்து பூர்ணர்களாகித் தன்னை அடைய வேண்டுமென்பதாகச் சங்கற்பித்துக் கொண்டிருக்கிறார். ஜீவன் சென்ற ஜன்மங்களில் பிரகிருதி விதிகளாகிய கடவுளின் ஆஜ்ஞைக்கு விரோதமாக நடந்து, அதனால் பாபத்தை விருத்தி செய்து கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டு வருவான். இவ்வித ஜீவன் இனி பாபங்களைச் செய்வதை ஒழித்து நல்லவனாவதற்காகக் கடவுள் அவனைப் பல ஜன்மங்களெடுக்கும்படி செய்து அவைகளில் பல கஷ்டங்களை யனுபவிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். நதியின் பிரவாஹத்திற்கு எதிராக நீந்துபவன் கஷ்டப்படுவான். அவ்விதம் நீந்துவதை விட்டு ப்ரவாஹம் செல்லும்வழியை அனுசரித்துச் செல்வானாகில், எளிதில் இஷ்டப்பட்ட இடத்தைச் சேருமாபோல் தர்மம் என்ற பிரவாஹத்திற்கு எதிரிடையாய்ச் செல்பவனுக்குக்கஷ்டங்கள் உண்டாகும். நெருப்பில் காலை வைப்பனுக்கு விசேஷ உபத்திரவமுண்டாகி இனி நெருப்பைத் தொடக் கூடாதென்ற ஞானம் ஏற்படுவதுபோல, பாபாத்மா தான் செய்த பாபங்களின் பயனாக பூலோக புவர்லோகங்களில் கஷ்டப்பட்டு அதன் பயனாக ஞானத்தை விருத்தி செய்து கொள்கிறான். இனி அப்பாபங்களைச் செய்ய வொண்ணாதென்ற புத்தியுடன் மறுபடியும் ஜனிக்கிறான். அதையே மனச்சாக்ஷியெனப்படுகிறது.

கடன் பட்டவனது கடன் ஒழிய வேண்டுமாகில் புதுக்கடன் படுதலை நிறுத்தல் வேண்டும். கஷ்டப்பட்டுத்

திரவியத்தைச் சம்பாதித்துப் பழையகடனைத் தீர்க்கவேண்டும். அவ்விதமே ஜீவன் முன் ஜன்மங்களிற் செய்த பாபங்களின் பலனை அனுபவிப்பதுடன் புதிய பாபங்களைச் செய்யாது இருக்கவேண்டும். பதிந்துள்ள தர்மத்தைத் தக்க நிஷ்டையால் நாசஞ் செய்யவேண்டும். பிராரப்தத்தை அனுபவித்துக்கொண்டு சஞ்சித கர்மத்தை நசிக்கச்செய்ய வேண்டும். இதற்காகவே கடவுள் ஜீவனுக்கு அனேக நல்ல உபாயங்களை ஏற்படுத்தியிருக்கிறார். வயலில் வேலை செய்யும் குடியானவனுக்குக் கலப்பை முதலிய உபகரணங்கள் எப்படியோ, அவ்விதம் ஜீவனுக்கு ஸ்தூல சூக்குமாதி சரீரங்களும் இந்திரியங்களும் மனஸும் ஜீவனுக்கு உபகரணங்களாகும். இவைகளைக்கொண்டு அனுபவத்தைப் பெற்று சரியான மார்க்கத்தை யறிந்து ஞானம் பூததயை ஆகிய ஸம்பத்துக்களை விருத்தி செய்துகொள்ளவேண்டும். இதற்காகவே பெரியோர்களும் ரிஷிகளும் தர்ம சாஸ்திரங்களை நிரூபணம் செய்திருக்கின்றனர்.

ஜீவனானவன் தர்ம சாஸ்திரங்களிற் கூறப்பட்ட விதி நிஷேதங்களை அனுஷ்டித்துப் பழைய கடனையும் கர்மத்தையும் நாசஞ்செய்துகொண்டு சித்த சுத்தியை அடைந்து ஸர்வபூத ஹிதனாகி, பூர்ணனாகி, ஈசுவரனைப்போலொத்தவனாக வேண்டுமென்பதாகக்கடவுள் ஆஜ்ஞாபித்திருக்கிறார். இந்த ஸ்திதியை அடைவதற்கு இதன் கீழ் வரையப்படும் விஷயங்கள் உபயோகமாயிருக்கும். சரீர, இந்திரிய, மனங்களின் தர்மங்களை அறிந்து அவைகளை ஜீவனுடைய உபகரணங்களாக ஆக்கி ஜீவனுக்குள் அடக்கவேண்டும். இங்கு வரையப் பட்டவை நமது ஹிந்து தர்ம சாஸ்திரத்திற்கு ஸம்மதங்கள். இவை தத்வஞ்ஞான ஸபையைச்சேர்ந்த திவ்யதிருஷ்டி உடையவர்கள் போதிக்கும் தர்மங்கள். இவை எம்மதத்திற்கும் விரோத முள்ளவைகளன்று. ஆகையால் ஸர்வ மதஸ்தர்களும் கவனிக்கத் தக்கவை.

## கவனிக்கவேண்டிய முக்கிய தர்மங்கள்.

மனோ தர்மங்களை நன்ருய் அறிதலுக்கு இங்கு கீழ் வரைந்திருக்கும் முக்யாம்சங்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டும். 1 தயாநிதியான கடவுள் ஜீவகோடிகளைப் பரிசுத்த ஸ்திதிக்குக் கொண்டு வந்து பூரணர்களாகச் செய்வதற்கு ஸதா பாடுபட்டு வருகிருர். கல்லைச் செடியாகவும், செடியை மிருக ஜந்துவாகவும், மிருக ஜந்துக்களை மனிதனுகவும், தனது திவ்ய சக்தியால் செய்து பின்னர் மனிதனை நல்லவனுகவும், குருவின் சிஷ்யனுகவும், ரிஷியின் சிஷ்யனுகவும் முடிவில் ரிஷியாகவும் செய்து தன்னைப் போல் பூரணனுகவும் செய்வார். இவ்விதம் எல்லோரையும் முன்னேற்றத்திற்குக் கொண்டுவரும் மார்க்கமே தர்மம் எனப்படும். இதற்கு எதிரிடையான மார்க்கம் அதர்மம்.

இவ்விதமே ஈசுவரன் உலகங்களையும் பஞ்சபூதங்களையும் கூட பரிசுத்த ஸ்திதிக்குக் கொண்டு வருவார், ஜீவன் பரிசுத்தனுக ஆக அவனது ஸ்தூல சூக்ஷ்மாதி சரீரங்களும் அவைகளிலுள்ள தத்வங்களும் அவைகளுக்கு சம்மந்தப்பட்ட உலகங்களும் ஈசுவரனுடைய தேஜஸால் பரிசுத்தமாகும். சுக்லாம்பர தரனுன விஷ்ணு ஸர்வ வியாபி. விஷ்ணுவானவர் ஸ்படிகம் போன்ற வெண்மையான தேஜஸை எல்லா திக்குகளிலும் எல்லா உலகங்களிலும் வியாபிக்கச் செய்து பரிசுத்த ஸ்திதிக்குக் கொண்டு வருகிருர். தர்மவிருத்தியே அவரது சங்கற்பம் அல்லது ஏற்பாடு.

2. இந்த தர்மவிருத்திக்காகவே ஈசுவராஜ்ஞையின் படி தேவதைகளும் ரிஷிகளும் ஸதா பாடு பட்டுக்கொண்டிருக்கிருர்கள். ஸ்தூல ப்ரபஞ்சத்தில் சக்கரவர்த்தி ஒருவரிருந்து அவருக்குக் கீழ் உள்ள பிரதானிகள் முதலியவர்களாலே ஸ்தூல ப்ரபஞ்சம் எவ்விதம் ஆளப்படுமோ அவ்விதமே சூக்ஷும உலகத்தில் நமது இந்திரியங்களுக்குப்

புலப்படாத பரிபாலனம் ஒன்றுளது இந்த குப்த பரிபால னத்திற்குச் சக்கரவர்த்தி ஈசுவரன். இவருடைய ப்ரதானி கள் ரிஷ்யாதிகள். இப்பரிபாலனமானது கடவுளது உத்தே சப்படி தப்பாது நிறைவேறும். இப்பரிபாலனத்தால் கருதப் படும் பயனானது யாதெனில்ஜீவகோடிகளைப் பரிபூரண ஸ்தி திக்குக் கொண்டு வருவதேயாகும். ஈசுவர சங்கற்பம் ஒருக் காலும்தவறாது. ஆகையால் ஜீவன் எத்தனை தவறுகள் செ ய்யினும் முடிவில் அந்த ஜீவனைக் கடவுள், நல்லவழிக்குத் திருப்பிப் பரிசுத்தனாகச் செய்து தன்னைப் போலொத்தவ னாகச் செய்வார். இவ்விதம் எல்லாவற்றையும் எல்லோரை யும் மேல் ஸ்திதிக்குக் கொண்டுவருவதற்கே உலகங்கள், உலகவாசிகள், ஸ்தூல சூக்குமாதி சரீரங்கள், ஜாக்கிரம் முதலிய அவஸ்தைகள், ஜனனமரணங்கள், சிருஷ்டி ஸ்திதிலயங்கள் புண்ணிய பாபங்கள் இவைகளால் உண்டாகும் பக்திஞான பூததயைகள், பிரளயங்கள், யுத் தங்கள், பலவிதமாயுள்ள ஜாட்யங்கள், கஷ்டங்கள், மதங் கள், தர்ம சாஸ்திரங்கள், பக்திஞானாதி அனுஷ்டானக் கிரமங்கள், இவைகளைத் தெளிவாய் எடுத்துரைக்கும் பெரி யோர்கள், போதகர்கள், மதஸ்தாபகர்கள், ரிஷிகள் முதலான யாவற்றையும் தயாநிதியான ஈசுவரன் நியமித்தி ருக்கிறார். ரிஷிகள் பரமதயாளுக்கள். அவர்கள் ஈசுவர னின் கீழ்ப்ரதானிகள். ஈசுவரனைப் போலொத்தவர்களாகி ஈசுவர தேஜஸையும் சக்தியையும் பூர்த்தியாகப்பெற்று ஈசுவரனுடைய சங்கற்பத்தை நன்றாய்த் தெரிந்துகொண்டு அதை நிறைவேற்றுவதற்காகவே ஸதா பாடுபடும் தயா ஸ்வரூபர்கள். இவர்கள் செய்யும் வேலைகளைக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.— (1) வேரின் மூலம் ஸதா ஜலமா னது செடி முழுவதும் வியாபிக்கும் மாதிரி இவர்கள் மூலம் திவ்யதேஜஸானது பிரதி ஜீவனுக்கும் பிரதி ஜனச மூகத்திற்கும் பிரதிதேசத்திற்கும் பாவிக்கொண்டுவரு கிறது. ஆனால் பக்தர்களும் தயாபரர்களும் இந்தத் தேஜ ஸை விசேஷமாக அடையக்கூடியவர்கள். (2) மதங்களையும்

நாகரீகங்களையும் ஸ்தாபித்து இவைகளின் மூலம் ஜீவர்களை ஞானவான்களாகவும் பக்தர்களாகவும் தயாளுக்களாகவும் சக்திமான்களாகவும் ஆக்குகிறார்கள். (3) குப்த வித்தையே உலகத்திற்கு ஜீவாதாரம். அது ஒருக்காலும் மங்காத மணி விளக்காய் உலகத்திற்கு உபயோகமாகி வரும்படி பாதுகாத்து வருகின்றனர். நூறு வருடங்களுக்கு ஒருமுறை அவர்களுடைய முக்கிய சிஷ்யர்களைப் பூலோகத்திற் கனுப்பி ராஜவித்யா பீஜங்களை விதைக்கிறார்கள். தர்ம ரஹஸ்யங்களைப் போதிக்கும் ஸபைகளின் மூலமும் குரு பரம்பரைகளின் மூலமும் இந்த ஞான தீபம் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும்படி செய்கிறார்கள். அஞ்ஞானத்தால் அனேகர்கள் கெட்டாலும் இந்த குப்த வித்தையைப் போதிக்கும் ஸபைகளையும் ஆசார்யர்களின் பரம்பரையையும் காப்பாற்றுகிறார்கள். மகசூல் காலத்தில் விதைகளைக் காப்பாற்றிச்சேகரிக்கும் குடியானவனைப்போல் ஈசுவராஜ்ஞையைப் பெற்ற ரிஷிகள் குப்த வித்தையைக் காப்பாற்றி வருகிறார்கள். இவ்விதம் தக்க காலத்தில் இந்த ஞானபீஜங்களை மறுபடியும் விதைத்து விருத்தி செய்து ஜீவகோடிகளை நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வருவார்கள். (4) பாபம் அதிகமாகின் பெரிய ஜாட்யங்களையும் யுத்தங்களையும் பிரளயங்களையும் உண்டாக்குவித்து அதர்மத்தைக் குறைத்து ஜீவர்களுக்குக் கஷ்டங்கள் முதலியவைகளால் பக்தி ஞான வைராக்யாதிகளை உண்டு பண்ணிக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது முடிந்த ஐரோப்பிய மஹா யுத்தம் இதற்கு ஒரு உதாரணமாகும். (5) மதத்திலும் குப்த வித்தையிலும் சிரத்தை யில்லாதவர்களை அவர்களின் பூர்வவாசனையை ஒட்டி பரோபகார சங்கங்களை ஸ்தாபிக்கச் செய்வதும் அவைகளில் உழைக்கும்படி செய்வதும் ரிஷிகளுடைய தூண்டுதல் தான். ரிஷிகள் மேல் உலகங்களில் வர்ஷிக்கும் அருள் பிரவாகத்தின் பயனாக பரோபகார எண்ணங்கள் உலாவுகின்றன. அவைகள் ஏற்ற மனப் பக்குவிகளின் மனதிற் பதிகின்றன.

ஆகவே இவ்வித எண்ண முண்டாவதற்குக் காரணம் ரிஷிகளே யாவர். (6) சாந்தத்தோடு பரோபகாரமாகப் பாடுபடும் பொழுதும், தியான காலத்திலும், நித்திரையிலும் அனேகர்களுக்கு ரிஷிகள் அனேக நல்ல விஷயங்கள் ஸ்புரிக்கும்படி செய்து கொண்டிருக்கிறார்கள். தேஜஸை அளித்துக் கொண்டிருப்பார்கள். இவ்விதம் பலவிதமாக ரிஷிகள் தர்மவிருத்திக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் ஒவ்வொருவரும் ரிஷிகளின் வேலைக்காக நமது சக்தியானுசாரம் பாடுபட்டு ஸஹாயம் செய்தல் வேண்டும். அதற்காக நல்ல வேலைகளையே செய்ய வேண்டும். நல்ல பேச்சுகளையே பேசவேண்டும். நல்ல சங்கற்பங்களையே நம்மிடம் விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

சூக்ஷ்ம லோகத்தில் ரிஷிகளின் வேலையைப் பங்கம் செய்யும் இராக்ஷதர்கள் உண்டு. இந்த ராக்ஷதர்கள் ஸ்வலாப புத்தியுடையவர்கள். இதரர்களை ஸ்வலாப புத்தியுடையவர்களாய்ச் செய்வதற்கும் பரோகாரத்திற்காக ரிஷிகள் செய்யும் வேலைகளைப் பங்கம் செய்வதற்கும் வேண்டிய தக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டு தங்கள் சக்தியை சூக்கும லோகத்தின் மூலம் ராக்ஷதர்கள் வினியோகித்துக் கொண்டிருப்பார்கள். ரிஷிகள் ஜீவர்களைப் பூததயை உடையவர்களாகச் செய்வதற்கு எவ்விதம் பாடுபடுகிறார்களோ, அவ்விதமே ஜீவர்களையும், சங்கங்களையும், தேசங்களையும் ஸ்வலாபபரர்களாய்ச் செய்வதற்கு இராக்ஷதர்கள் ஸதா வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஒருவன் ஈசுவரனிடத்தில் பக்தியைச் செய்து கொண்டிருக்கும் பொழுது அவனை ஸ்வலாப பக்தனாகச் செய்வார்கள். ஒரு மதஸ்தனை இதர மதஸ்தர்களையும் இதரமதங்களையும் துவேஷிக்கும்படி செய்வார்கள். தேசங்களுக்கும் மனிதவர்க்கங்களுக்கும் சங்கங்களுக்கும் பரஸ்பர பேத புத்திகளை உண்டாக்குவித்து "என் மதமே மேல்" "என் சித்தாந்தமே சிரேஷ்டம்" என்ற அபிப்பிராயங்களை

உண்டாக்குவித்து பரஸ்பர பேதங்களையும், த்வேஷங்களையும், பலவிதமாயுள்ள வைஷம்யங்களையும் ஒருவருக்கொருவர் கெடுதி செய்யவேண்டுமென்ற சங்கற்பங்களையும் பலப்படுத்தி, இவைகளால் யுத்தங்கள் முதலான கஷ்டங்களை உண்டுபண்ணுவார்கள். இப்பொழுது பிரபஞ்சத்திலுள்ள வெள்ளைக்காரர்களுக்கும் கறுப்பு மனிதர்களுக்கும், உள்ள வேற்றுமைக்கும், மதங்களுக்குள்ளும் தேசங்களுக்குள்ளும், நமது தேசத்திலுள்ள பலவிதமான மதங்களுக்குள்ளும் ஜாதிகளுக்குள்ளும் பரஸ்பரம் காணப்படும் த்வேஷங்களுக்கும், முரண்களுக்கும் இந்த ராக்ஷதர்களே முக்கிய காரணம்.

இவ்விதம் அதர்மத்தைப் பலப்படுத்தும் ஸ்வலாபபரத்வமும், த்வேஷங்களும், அதிகமாகிக் கொண்டிருக்க இவைகளை நசிக்கச்செய்வதற்காகவே, ஸர்வஞ்ஞர்களான ரிஷிகள் ஐரோப்பிய மஹாயுத்தத்தை உண்டாக்கினர்கள். பரோபகாரத்தையும், பிரபஞ்ச க்ஷேமத்தையும் உத்தேசித்து பிரான்சு, இங்கிலாந்து, இத்தாலியா, அமெரிக்கா தேசங்கள் ரிஷிகளாலே தூண்டப்பட்டு, ராக்ஷஸ ஸங்கற்பத்திற்கும் புரோத்ஸாஹங்களுக்கும் ஈடுபட்ட ஸ்வலாபபரர்களான ஜர்மனி தேசத்தாரோடு யுத்தஞ் செய்தார்களென்பதாகவும், இந்த யுத்தகாலத்தில் இராக்ஷதர்களும் ரிஷிகளும் தங்கள் தங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஜயத்தை உண்டாக்குவதற்கு சூக்ஷ்மலோகத்தில் விசேஷமாக முயன்றார்களென்பதாகவும், சூக்ஷ்மலோகத்தில் இராக்ஷதர்களின் சக்தியை நசிக்கச்செய்து முடிவில் ரிஷிகள் தமது பக்கத்தாரையே ஜயிக்கும்படிச்செய்தார்களென்பதாகவும் திவ்ய திருஷ்டியுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இவ்விதமே மகாபாரத யுத்தத்திலும் இராக்ஷதர்கள் துரியோதனனை தூண்டி விட்டார்களல்லவா? இவ்விதம் யுத்தங்கள் முதலியவற்றின் ஜயாபஜயங்கள் முதலில் சூக்ஷ்மலோகத்தில் ஏற்பட்டு ஸ்தூலப் பிரஞ்சத்தில் அதேவிதமாய்ப் பிறகு பிரதிபலிக்கும். ரிஷிகள் ஸர்வ

சக்தர்களாகையால், அவர்களுடைய சங்கற்பம் தவறாது நிறைவேறும். ஸ்ரீ கிருஷ்ணபகவான் விசுவரூபத்தை அர்ச்சுனனுக்குக் காட்டிய பொழுது பீஷ்மாதிகள் கொல்லப் பட்டிருப்பதை யுத்தத்திற்கு முந்தியே அர்ச்சுனன் பார்க்கவில்லையா? (கீ. அ. 11.) இது சூட்சும லோகத்தின் இயல்பு. ஸத்ஸங்கற்பமுள்ள சக்கரவர்த்திகளும் சங்கத்தாரும் தேசத்தாரும் இவ்விதம் ரிஷிகளின் அபார சக்தியுள்ள சங்கற்பத்தாலே தூண்டப் படுவார்கள். ஸ்தூலப் பிரபஞ்சத்தில் சம்பவிக்கும் காரியங்களாகிய மாறுதல்கள் இந்த சங்கற்பத்திற்கு அனுகுணமாகவே யிருக்கும். ஆகையால் விவேகமுள்ள பிரதிமனிதனும் ஈசுவரனுடைய இந்த உத்தேசத்தைத் தெரிந்து கொண்டு ஸதா அதனை நிறைவேற்றுமாறு பாடுபடல்வேண்டும். அப்பொழுது ரிஷிகள் இவனைத் தங்களது கருவியாக உபயோகப்படுத்திக் கொண்டு தங்கள் பிப்பங்தியில் சேர்த்துக் கொண்டு தங்களுடைய தேஜஸை அவன் மூலம் வியாபிக்கச் செய்து, அந்தந்த சமயத்திற்கேற்ற வேலைகளைச் செய்வதற்கு அவனுக்கு சக்தியைக் கொடுத்துப் பரிசுத்தனாகச் செய்வார்கள். நாம் செய்யும் ஒவ்வொரு நல்ல வேலையும், பேசும் நல்ல பேச்சும் கொள்ளும் நல்ல சங்கற்பமும் மகரிஷிகளின் திவ்யதேஜஸைக் கொஞ்சம் ஆகர்ஷிக்கும். ரிஷிகளின் சக்தியை அதிகரிக்கச் செய்யும். இதுவே தெய்வீக ஸம்பத்து. ஒவ்வொரு கெட்ட கார்யமும், கெட்ட பேச்சும், கெட்ட சங்கற்பமும் ராக்ஷதர்களையும் அவர்களின் துஷ்ட தேஜஸையும் ஆகர்ஷித்துக் கொண்டு கேடுவிளைவிக்கும். இவனது துர்விருத்தியானது, ராக்ஷதர்களுடைய சக்தியை விருத்தி செய்யும். இதுவே ராக்ஷதர்களின் தனம் அல்லது அசுரஸம்பத்து (கீதை அ. 16)ஜீவன் நல்லதாகவும் கெட்டதாகவும் இருப்பதற்கு ஸ்வதந்திரனானையால் ஒவ்வொருவனும் பரோபகாரத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டு தியானித்துக் கொண்டிருக்க வேண்டும். இதுவே ராஜயோகம். இதனால் ரிஷிகளின் தேஜஸை அடையக்கடவோம்.

(3) பிரதிகாரணத்திற்கும் கார்யம் அல்லது பலன் தவறாது ஏற்படும். பூமியில் நெல் விதைத்தால் நெல்லும் கருவேல் விதை விதைத்தால் முள்ளுள்ள கருவேலன் செடியும் முளைக்கும். எதைச்செய்யினும் அதன் பலன் தப்பாது உண்டாகும். இந்தப் பிறப்பில் மனிதன் திருடனு யிருந்தாலும், சக்திபானுசாரம் தான தர்மங்களைச் செய்யா திருந்தாலும், வரும் ஜன்மத்தில் தரித்திரனுவான். பிறன் வீட்டிற்கு நெருப்பு வைத்தால் குஷ்டரோகியாவான். தானம் செய்தால் தனவந்தனுவான். வித்யாதானத்தால் பெரிய வித்வானுவான். பக்திஞான முள்ளவனுகி எல்லோருடைய நன்மைக்காகப் பாடுபட்டுக்கொண்டு ஸத்போதனைகளைச் செய்து கொண்டிருப்பானுகில் விசேஷபக்தி ஞானங்களாலே ஜ்வலித்துக்கொண்டு உலகத்திற்குப்பெரிய நன்மையைச் செய்பவனுவான். துன்மார்க்கனுக இருக்கின் துன்மார்க்கர்கள்குலத்தில் ஜனிப்பான். அதனுல்கெடுவான். போகத்தைச் செய்து அதனின்று வழுவினுலும் பக்தர்களான ஸ்ரீமந்தர்களுடைய குடும்பத்திலும், போகிகளின் குடும்பத்திலும் ஜனித்து பக்திஞான பூததபைகளை மீளவும் விசேஷமாக விருத்தி செய்துகொண்டு உன்னத ஸ்திதியை அடைவான். (கீதை. அ. 6) கோபி கோப குணமுள்ளவனுகவும், சாந்தன் சாந்தகுண முள்ளவனுகவும், அந்தந்த குணமுடையவர்கள் அந்தந்த குணத்துடனும் ஜனிப்பார்கள். இக்குணங்களெல்லாம் சூக்குமாதி சரீரங்களிலுள்ள வாஸனைகள். ஒருவன் துஷ்டகுணமுள்ளவனுய் ஜனிக்கினும் இக்குணம் அவனது சூக்ஷ்ம சரீரத்தை மாத்திரம் ஒட்டியிருக்கும். துஷ்டபுத்தியை மூட்டிக் கொண்டிருக்கும். ஆனுல் பரப்பிரஹ்மமாகிற பெரும் சுடரின் சிறு பொறியாகிய ஜீவன் ஞானம், ஸத்ஸாங்கத்யம், பெரியோர்களின் ஸேவை, பூததபையாதிகளாலே இத்துர்குணத்தை நசிக்கச்செய்து கொள்ளலாம். ஆனுல்அது கஷ்டசாத்தியமே. அசாத்தியமன்று. சரீரத்தில்பெரிய விரணமுள்ளவன் தகுந்த சிகித்ஸைகளால் அதை சுவஸ்தப்படுத்திக்கொள்ளுவதுபோல ஜீவன் தனது

ஸூக்ஷ்ம சரீரத்தில் புதைந்திருக்கும் துஷ்ட குணங்களையும் ஜாட்யத்தையும் தகுந்த நிஷ்டை யென்ற அவுடதத்தாலே போக்கடித்துக் கொள்ளலாம். ஜீவன் ஈசுவராம்சன் ஈசுவரனுக்குள்ள ஸ்வதந்திரம் இவனுக்குமுண்டு. தன் சக்திகளை இவன் நல்லது அல்லது கெட்ட வேலைகளுக்கு உபயோகப்படுத்தக்கூடும். உபயோகப் படுத்தவும் செய்கிறான். மேற்சொன்னபடி இந்த ஜன்மத்தில் எண்ணும் நல்ல சங்கற்பங்கள் வரும் ஜன்மத்தில் ஸத்குணங்களாயும், நல்ல கோரிக்கைகள் ஸத்கார்யத்தைச்செய்யும அவகாசங்களாயும், நல்ல கார்யங்கள் ஸத்ஸாங்கத்தியதையும் உண்டாக்குவிக்கும். ஆகையால் ஸதா ராஜயோக நிஷ்டையை அப்யஸித்தல் வேண்டும்.

(4). பிரபஞ்சமெல்லாம் ஈசுவரனது குடும்பம். ஜீவர்கள் எல்லோரும் ஈசுவரனது குழந்தைகள். ஆனது பற்றி ஜீவர்கள் ஸஹோதரர்களாவார்கள். இவர்களெல்லோரும் நிஜமாய் ஈசுவரனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஈசுவரனாகிய அங்கிக்கு அங்கங்கள். இக்குடும்பத்தின் ஆஸ்தி தர்மமாகும், இதை விருத்தி செய்வதற்கு பிரதி ஜீவனும் பாடுபடல்வேண்டும். அப்போது தர்மம் விருத்தியாகும். சிலர் துஷ்ட நடத்தை யுள்ளவர்களாகின், ஆஸ்தியான தர்மம் குறையும். பிரபஞ்சம் கெடும். மட்டுக் கடங்காத பாபம் இந்த துஷ்டர்களுக் குண்டாகும். ஆகையால் ஒவ்வொருவரும் தான் ஈசுவரனுடைய பிள்ளை யென்பதாகவும், ஆனது பற்றி ஈசுவரனுடைய வேலையைச்செய்ய வேண்டுமென்பதாகவும், ஜீவர்களெல்லோரும் ஸஹோதரர்களென்பதாகவும், தெரிந்து கொண்டு மனிதவர்க்கம், ஜாதி, மதம் இவைகளுக்குள் பரஸ்பர த்வேஷங்களை யொழித்து ஸஹோதர பாவத்தாலே எல்லோரிடமும் தயைஉண்டாகி மன அமைதியோடு திரிகரணத்தாலும் சக்தியானுசாரம் எல்லோருடைய நன்மைக்காகவும் பாடுபட்டுக்கொண்டிருக்க வெண்டும். தர்மவிருத்தி செய்து கொண்டிருக்க வேண்டும்

தர்மத்திற்கு அனுகூலமாகவாவது இல்லையேல் விரோதமாக வாவது மூன்று விதங்களாக நாம் பிரவிருத்திப்போம். சரீரத்தால் அதாவது கார்யங்களாலும், வாக்கால் அதாவது பேச்சுக்களாலும், மானஸிகமாய் அதாவது சங்கற்பங்களாலும், ஆசைகளாலும் இந்த மூன்றினாலும் தர்மாதர்மங்களைச் செய்யலாம். ஒருவன் கெட்ட கார்யங்களைச் செய்தால் அவனைப்பார்த்துக் கெட்டகார்யங்களைச் சிலர் கற்றுக்கொள்வார்கள். இவ்விதம் சிலர்களைக் கெடுக்கும். தர்மம் குன்றும். இந்தப் பாபம் இந்த துஷ்டனை யடையும். அவ்விதமே கெட்ட பேச்சுகள் சிலரைக்கெடுக்கும். ஆகையால் நாம் கெட்ட செய்கைகளையும் கெட்ட பேச்சுக்களையும் பூர்த்தியாக ஒழிக்கும் பழக்கத்தை தினம் தினம் பலப்படுத்தல்வேண்டும். இவ்விதம் செய்யின் நம்மைச் சுற்றியுள்ள பாலர் பாலிகைகள் பரிசுத்தர்களாவார்கள்.

கெட்ட மனதால் அதாவது கெட்ட கோரிக்கைகள், கெட்ட சங்கற்பங்களாலும் பிரபஞ்சம் முழுவதையும் ஸமஸ்த ஜீவகோடியையும் சமீபத்திலுள்ளவரையும் தூரத்தில் இருப்பவர்களையும் இதர தேசஸ்தர்களையும் கெடுப்போம். அதாவது இதரர்கள் அறியாமலே, கெட்ட சங்கற்பங்கள் அனேகர்களுடைய மனதில்பிரவேசித்துக் கெட்ட புத்தியை உண்டாக்கும். இதனால் தர்மம் குறையும். இவ்விதம் எப்படி ஆகுமென்பதைத் தெளிவாய் விசாரிப்போம். இப்பொழுது பச்சிமதேசத்தார்கள் தந்திக் கம்பி இல்லாமலே தந்தி ஸமாசாரம் அனுப்புதல் கண்டு பிடித்திருக்கிறார்களல்லவா? இதை எவ்விதம் அனுப்புகிறார்களென்பதை விசாரிப்போம். ஸ்தூலபஞ்ச பூதங்கள் அதாவது ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமென்ற ஐம்பூதங்களும் சேர்ந்து பூலோகமாகும். இவைசேர்ந்து பூலோகமாகும். இவைகளில் முதல் நான்கையும் பஞ்சேந்திரியங்களின் துவாரா கிரஹிப்போம், ஆகாசம் (ether) நமது இந்திரியங்களுக்குப் புலப்படாத பூதம். வெறும் சூன்யமன்று: அது வாயுவை விட

சூட்சுமமானதத்துவம் பானகத்தில்ஒருதுணியைகனேக்கின் அத்துணிமுழுமையும் ஜலமும், ஜலம் நிறைய சர்க்கரையும் மூன்றுவஸ்துக்களும் ஒரே ஸ்தலத்தில் வியாபித்திருக்குமா போல் இந்த ஆகாசதத்வம், (ether) மற்ற நான்கு தத்வங்களானபிருதிவி, அப்பு, தேயு, வாயு, என்ற இவைகளில் பிரவேசித்து எங்கும் வியாபித்திருக்கும். இது திவ்ய திருஷ்டிக்குப்புலப்படும். தந்தியில்லாத டெலிகிராப் யந்தரத்தை அசைத்த உடனே அதனுடைய மின்னல் சக்தி சம்மந்தமான அலைகள் வெளிப்பட்டு அந்த அலைகள் அதன் சமீபத்தில் இருக்கும் ஆகாசதத்வத்தைச் சலிக்கச்செய்து அதனிடம் ஒரு அலையை உண்டாக்குவிக்கும்.

(தொடரும்)

நஞ்சுண்டப்பா.

[இது தெலுங்கில் ஆசிரியர் அச்சிட்ட தண்டுப்பத்திரிகையை ஏனங்குடி ராமசந்திர நாயுடு மொழி பெயர்த்தது.]

---

## தென் இந்தியா பிரஹ்மஞானக் கான்பரன்சு.

1922ளு மார்ச்சுமீ 31உயோடு முடிவாகிற வருஷத்தின் அறிக்கை

அமைப்பு:— காசியில் 9—10—21ல் நடந்த இந்தியன்செக்ஷனுடைய கவுன்சில் மீட்டிங்கில் சில முக்கியமான மாறுதல்கள் செய்யப்பட்டன. இந்தியாவானது வடஇந்தியா கான்பரன்ஸ் இலாகா தென்இந்தியா கான்பரன்ஸ் இலாகா வென்று இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டது. மாகாணக் காரியதரிசி வேலையானது நீக்கப்பட்டது. அவர் வேலையை பெடரேஷன் காரியதரிசிகள் செய்யவேண்டுமென ஏற்பட்டது. பெடரேஷன்களால் அக்காரியதரிசிகள் தேர்ந்தெடுக்கப்படுபவர். பிரஹ்மஞானத்தைப் பரவச்செய்யும் வேலையை மேற்பார்ப்பது வடஇந்தியாவில் வடஇந்தியாக் கான்பரன்ஸையும் தென்இந்தியாவில் தென்இந்தியாக் கான்பரன்ஸையும்சேர்ந்தது என்றுநிச்சயிக்கப்பட்டது. ஒவ்வொரு பெடரேஷன் இலாகாவும் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து

இந்தியா கவுன்சிலுக்கு அனுப்ப பாத்தியமுண்டு. கான்பரன்ஸுக்கு லாட்ஜ் ஆர்கனைஸர்களை நியமிக்கும் பாத்தியம் உண்டு. மேற் கண்ட விதிகளுக்கு எற்ப 7—12—21ல் நடந்த நமது கான்பரன் ஸின் நிர்வாக கமிட்டியார் தமது விதிகளையும் மாற்றியுள்ளார்கள்.

நம் தலைவர்கள்:—உலகமுழுவதும் பரவியுள்ள நமது பிரஹ்ம ஞானசபைக்குப் பிரஸிடெண்டாக மூன்றுமுறை மாதுஸ்ரீ அன்னி பெஸண்டம்மையவர்களை உலகத்துள்ள சகல அங்கத்தினரிலும் பெரும்பாலர் தேர்ந்தெடுத்திருக்கிறது எல்லாருக்கும் மிகுந்த ஆனந்தத்தைத் தரக்கூடியது. சகோதரர் ஸி. ஜினராஜதாஸர் அவர்கள் வைஸ்பிரஸிடெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சகோ. ஸி. டபிளியூ லெட்பீடர் அவர்கள் இந்தியாவுக்கு வர இய லும் என்று எண்ணியிருந்தோம். அவர்வரக்கூடிய நிலைமையில் அவர்கள் தேகஸ்திதி இல்லையென்று அறிய வருந்துகிறோம். அவர்கள் நமக்களித்திருக்கிற மதிக்க வொண்ணாத அரிய புஸ்தகங் களுக்கும் அவர்களது சாந்தத்திற்கும் பொறுமைக்கும், ஞானத் திற்கும் நாம் மிகவும் கடமைப்பட்டுளோம். நமது கான்பரன்ஸ் பிரஸிடெண்டாயிருந்த பி. பி. வாடியா அவர்கள் தேசசஞ்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சென்ற விடமெல்லாம் பிரஹ்மஞானத்தைப் பற்றி உபந்யாஸம் செய்து வருகிறார்கள் புது விதிகளின்படி இந்தியன் செக்ஷன் ஜாயிண்டு ஜனரல் செகிரி டெரி தான் இக்கான்பரன்ஸின் ஸ்திரமான பிரஸிடெண்டாக இருப்பதால் ஸ்ரீ வாடியா அவர்கள் இப்போது நமது பிரசிடெண் டல்ல.

பெடரேஷன்களின் சுறுசுறுப்பு:— இந்த கான்பரன்ஸ் இலாகாவில் 7 பெடரேஷன்கள் இருக்கின்றன. கேரள பெட ரேஷனைத்தவிர மற்ற எல்லா பெடரேஷன்களும் சுறுசுறுப்பா யிருந்தன. கேரள தேசத்தில் இந்த வருஷத்தில் நடந்த கல கத்தின் பலனாக யாதொரு சுறுசுறுப்பும் இல்லை. இனி அடுத்த வருஷம் முதல் மிகவும் ஊக்கத்துடன் அந்த இலாகாவில் வேலை நடக்கும் என்று நம்புகிறோம். சென்ற சப்டம்பர் மீத்தில் காஞ்சி புரத்திலும், நவம்பரில் மதுரையிலும் நடந்த பெடரேஷன்களில் டாக்டர் பெஸண்டம்மையவர்களும், பங்களூர், பெல்லாரி, சேலம் குண்டூர் ஆகிய 4 நகரங்களில் சென்ற ஜூன், ஆகஸ்டு, நவம்பர், பிப்பிரவரிமீங்களில்நடந்தபெடரேஷன்களில்ஸ்ரீமான் ஸி. ஜினரா ஜதாஸர் அவர்களும் அக்கிராஸனம் வகித்தார்கள். இதைத்தவிர

நமது வைஸ்பிரஸிடெண்டவர்கள் மைசூர் ராஜ்யத்தில் பல இடங்களில் உபந்யாஸம் செய்தார். தவிரவும் கோலாரில் நடந்த பஞ்சமர் மகாநாட்டில் அக்கிராஸனம் வகித்தார். மைசூரில் நடந்த வேறு ஒரு மகாநாட்டிற்கும் விஜயம் செய்தார்.

கர்னாடக பெடரேஷனில் சுறுசுறுப்பு மெச்சத்தகுந்தது. 114 புது அங்கத்தினர் சேர்ந்திருக்கின்றனர். அங்கத்தினரின் மொத்த எண்ணிக்கை 716 அவர்களில் 43 பேர் ஸ்திரீகள். ஸ்ரீ ஜஸ்டிஸ் சந்திரசேகர அய்யர் மனைவியார் ஸ்ரீமதி பார்வதியம்மாளின் மெச்சத்தகுந்த முயற்சியினால் ஸ்திரீகளின் அபிவிருத்திக்காக மஹிளா ஸேவா ஸமாஜம் வேலைசெய்து வருகிறது. கொள்ளேகாலம், மல்லேசுவரம் என்ற இரண்டு ஊர்களிலும் முன்னேற்றமற்ற ஜாதியார்களுக்காக இராப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றன. பிரஹ்மஞானத்தைப் பரவச்செய்வதற்காக சபையங்கத்தாரும் மற்றோரும் அனேகமாவுதற்குக் கூட்டங்கள் கூட்டப்பெற்றன.

தெற்குத் தமிழ் ஜில்லாக்களின் பெடரேஷனில் ஸிலோன் சேர்ந்திருக்கிறது. ஸ்ரீமான் பியர்சு ஸிலோனிலும் ஸ்ரீமான் ஆர் பஞ்சாபகேசய்யர் திருநெல்வேலி ஜில்லாவிலும் நன்றாக வேலை செய்து வருகின்றனர். லாட்ஜூ ஆர்கனைஸர் சகோ. எம். சுப்பிரமணியய்யர் தன்னுடைய ஊக்கத்தினாலும், சமாஸப்படுத்திக் காரியத்தை நிர்வகிக்கும் சாமர்த்தியத்தினாலும், பௌத்தமத ஞானத்தினாலும் ஸிலோனில் வேலை செய்வதற்கு இன்றியமையாதவர் என்று பெடரேஷன் காரியதரிசி சகோ. கே. எஸ். ராமசந்திரய்யர் தெரிவிக்கிறார்.

குரூப்களும் குரூப்கான்பரன்சுகளும்:— இந்த கான்பரன்ஸ் இலாகாவில் 39-குரூப்கள் இருக்கின்றன. 23 குரூப்களில் சந்திப்புகள் நடந்தன. ஆனால் 7-காரியதரிசிகள் தான் அறிக்கைகளை அனுப்பினார்கள். இது சரியல்ல. எல்லா குரூப் காரியதரிசிகளும் கான்பரன்சுகளை நடத்துவதுடன் அறிக்கைகளையும் அனுப்பவேணும். இல்லாவிடில் அசிரத்தையைக் காட்டும். சகோ. ஸர். டி. சதாசிவையர் அவர்கள் 6-ஜில்லா குரூப் கான்பரன்ஸ்களில் அக்கிராசனம் வகித்தார்கள். மற்றும் அநேகம் ஊர்களுக்குச் சென்று பிரசங்கம் செய்திருக்கின்றனர். அவர்களது ஆழ்ந்த அறிவும், அரியகுணமும், தேர்ந்த உலக அனுபவமும், பிரஹ்மஞான சபையைச் சேர்ந்தவரையும், சேராதவரையும், வசப்படுத்துகிறது. அவர்கள் தமது காலத்தையும், பணத்தையும், சரீர பலத்தையும் நமது

சபைக்கு உபயோகமாகுமாறு செலவழிப்பது மிகவும் மெச்சத் தகுந்தது. ஜாயிண்டு ஜனரல் காரியதரிசி சகோ. டி. ராமச்சந்திரய்யர் அவர்களைப்போல் வேலை செய்வது ஒருவராலும் முடியாது. 79 லாட்ஜுகளைப் போய் பார்வையிட்டிருப்பதுடன் குருப் கான்பரன்சுகளில் தலைமைவகித்தார்கள். ஸ்ரீமான் கஸின்ஸும் அவர் மனைவியாரும் இரண்டு கான்பரன்சுகளிலும் ஸ்ரீ குல்கர்னியவர்கள் இரண்டு கோன்பரன்சுகளிலும் அக்கிராசனம் அலங்கரித்தனர். எல்லோருடைய உதவிக்காசவும் வந்தனம்.

நமது உத்யோகஸ்தர்கள்:—லாட்ஜு ஆர்கனைஸர்கள் 8 பேர்களில் ஐவருக்கு சம்பளமும் சவாரிப் படியும் இருவருக்கு சம்பளமில்லாமல் படிமட்டும் உண்டு. ஒருவர் சம்பளமும் இன்றி படியும் வாங்காமல் வேலைசெய்கிறார். முதற்கூறிய ஐவரில் மூவருக்கு இந்தியன் செக்ஷன் பண்டிலிருந்து சம்பளமும் படியும் கொடுத்து வரப்படுகிறது. மற்றிருவருக்கும் ஜாயிண்டு ஜனரல் செக்ரிடெரியும் சிலஊக்கமுள்ள சகோதரர்களும் பணம்கொடுத்திருக்கின்றனர் குருப் ஆர் கனைஸர் சகோ. பஞ்சாபகேசய்யர் விடாமுயற்சி யுடன் மிக ஊக்கமாகப்பற்பல ஊர்களுக்குச் செல்வதால் தென் இந்தியா கன்வென் வசமிருந்த பணம் செலவாய் விட்டது. ஆனாலும் அவர் ஊக்கம் மெச்சத்தகுந்தது.

சபைக்கட்டிடங்கள்:—சித்தூர் காஞ்சிபுரம் என்ற இரண்டு நகரங்களிலும் கிளைச்சபைகளுக்காகக் கட்டப்பட்ட இரண்டு கட்டிடங்கள் உள்பட இவ்வருட முடிவில் லாட்ஜுகளுக்குச் சொந்தமாக 58 கட்டிடங்கள் இருக்கின்றன.

ஊக்கமுள்ள ஊழியர்கள் தேவை:— சகோ, ஸர். டி. சதாசிவய்யர் அவர்கள் தென்இந்தியாவில் சுற்றிவருகிறார்கள். ராவ் சாஹேப் ஜி. சங்கரராயர் அவர்கள் தெலுங்குதேசத்தில் உபன்யாசம் செய்கிறார்கள். இன்னும் எத்தனையோ ஊழியர்கள் தேவையாயிருக்கிறது சகோ.வி. ராமய்யா அவர்கள் சிதிலமான சரீரத்துடன் அலைதல் எவ்வளவு சிரமமாயிருக்கிறது. வேறொரு திடகாத்திரமுள்ள ஊழியர் ஏற்பட்டால் ஸ்ரீமான் வி. ராமையா அவர்களது அறிவையும் அனுபவத்தையும் புதிய புத்தகங்களை யுண்டாக்குவதில் உபயோகித்து பெரும்பயன் அடையலாம். முக்கியமாய் தமிழ்பாஷை மட்டும் தெரிந்தவர்கள் பெரும்பாலும் உள்ளதஞ்சாவூர் ஜில்லாவில் தேவைதான். மிகவும் கவனிக்கத் தக்கது.

பலகிளைச்சபைப் பொதுக்கூட்டம்:—சென்னையிலும், பங்களூரிலும் உள்ள கிளைச்சபைகள் சேர்ந்து ஓர் இடத்தில் பொதுக் கூட்டங்கள் கூடுவது மிகவும் உற்சாககரமாயிருக்கிறது.

தேச பாஷைகளில் புத்தகங்கள்:—தென் இந்தியாவில் தெலுங்கு ஜில்லாவில் துண்டுப்புத்தகங்கள் சகோ. ராஜகோபாலய்யங்கார் நஞ்சுண்டப்பா அவர்கள் முயற்சியினால் பிரசுரமாகி வருகின்றன. கர்னாடக பாகத்திலும் இவ்விதம் பரவச்செய்ய முயற்சியாய்க் கொண்டுவருகிறது. தமிழ் பாஷையில் புஸ்தகங்கள் அச்சிட்டு வெளிப்படுத்த ஒரு கம்பேனியை ரிஜிஸ்டர் செய்ய உத்தேசம் செய்திருக்கிறது. அவித்தையுடன்போர்செய்துவித்தையைப்பரவச்செய்யபுஸ்தகங்களாகிய அஸ்திரங்கள் முக்கியம் அல்லவா? அவ்வஸ்திரங்கள் தெளிவாயும் அழகாயும் கண்ணுக்கினிமையாயும் அமைந்தால் மிகவும் பலமுள்ளவைகளாக ஏற்படும் அல்லவா?

ஸ்திரீகள் அபிவிருத்தி ஸ்ரீமதி டோரதி ஜினராஜ தாஸ அம்மாளும், ஸ்ரீமதி கஸின்ஸ் அம்மாளும், லேடி. சதாசிவையர் அவர்களும் ஸ்ரீமான் எம். சுப்பிரமணியய்யர் அவர்கள் மனைவியாரும் ஸ்திரீகள் அபிவிருத்தி விஷயமாய் வேலைசெய்து வருகின்றனர்.

கிரீஷ்மகாலப் பள்ளிக்கூடம்:—அடையாற்றில் சகோ ஜினராஜதாஸர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஈஸ்டர் விடுமுறைக்கு அடுத்து நடந்தது.

எஸ். ராஜாராமய்யர்

காரியதரிசி.

மதுரையில் வெண்தாமரை நாள்:—இந்த மேமீ 8௳ மதுரை பிரஹ்மஞானசபையார் 700 ஏழை ஜனங்களுக்கு அன்னமிட்டார்கள். மாதுஸ்ரீ பிளவாட்ஸ்கியம்மாள் தன் ஞாபகார்த்தம் செய்ய வேண்டும் என்று அருளிச்செய்தபடி ஏழைகளுக்கு அன்னமிடப்பட்டதுடன் அன்றுமாலை 7மணிக்குக்கூடிய பொஜனக்கூட்டத்தில் வேதப்பிராமணர்களால் முதலில் தைத்திரிய உபநிஷத்து பாராயணமும், தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரமும் நடந்த பின்னர், ஸம்ஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் கீதையின் 12-வது அத்தியாயமும் ஆசியதீபம் என்ற உயர்ந்த ஆங்கில காவியத்தில் ஒரு பாகமும் பைபிள், குரான் புஸ்தகங்களின் பாகமும் வாசிக்கப்பட்டன. பிறகு சகோ, எம். நாராயணசாமி அய்யர் ஒருசிலவார்த்தைகள் கூறியபின் சபை இனிது நிறைவேறிற்று.

# தக்ஷிணமித்திரன்.

இதற்கு முன் (South Indian Mail) என்ற பெயருடன் இங்கிலீஷில் பிரசுரம் செய்யப்பட்டு வந்த பத்திரிகையை சென்ற மாசி மீ முதல் தமிழில் ‘தக்ஷிணமித்திரன்” யென்ற பெயருடன் பிரதி திங்கட் கிழமையும் மதுரையில் பிரசுரம் செய்யப்படுகிறது.

இதில் ராஜீயம் பொதுஜன நலம், கல்வி, சில்பம். முதலிய எல்லா விஷயங்களைப்பற்றியும் அரிய வியாசங்களும், பலவூர் சங்கதிகளும் பிரசுரமாகும்.

இப்பத்திரிகை தமிழைத் தாய்பாஷையாயுள்ள ஜனங்கள் வசிக்கும் எல்லாவூர்களுக்கும அனுப்பப்படுவதால் இது விளம்பரங்கள் பிரசுரம் செய்ய மிகவும் உபயோகமாயிருக்கும். எல்லோரும் சந்தாதார்களாகச் சேரக் கோரப்படுகிறது.

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| உள்ளூர்:— | வருஷம் 1க்கு ரூ | 5—0—0. |
| வெளியூர்:— | வருஷம் 1க்கு ரூ | 6—0—0. |
| பினங்கு முதலிய அந்நியநாடுகளுக்கு | வருஷம் 1க்கு ரூ | 8—0—0. |

## விளம்பர விகிதம்.

| | | 3 மாசம். | 6 மாசம். | 1 வருஷம். |
|---|---|---|---|---|
| ¼ பத்தி | ... ரூ | 6—0—0 | 10—0—0 | 16—0—0. |
| ½ ,, | ... ரூ | 10—0—0 | 16—0—0 | 30—0—0. |
| 1 பத்தி | ... ரூ | 16—0—0 | 30—0—0 | 55—0—0. |

தாத்காலிக விளம்பரங்களுக்கு முதற்தடவைக்குப் பத்தி 1, வரி 1-க்கு 4 அணாவும், பிந்தின ஒவ்வொரு தடவைக்கும் 2 அணாவும் விதிக்கப்படும்.

இப்பத்திரிகை அச்சாகும் “விக்டோரியாபிரஸ்” ஸில் இங்கிலீஷ் தமிழ் பாஷைகளில் எல்லாவித அச்சுவேலைகளும் நேர்த்தியாகவும் குறிப்பிட்ட காலத்திற்குள்ளும் செய்து கொடுக்கப்படும்.

மற்ற எல்லா விவரங்களுக்கும் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்

தக்ஷிணமித்திரன்.

மதுரை.

# ஜகப் பிரசித்திபெற்ற ஜிண்டான் மாத்திரை




---

எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜிண்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப்பெற்று நாடெங்கும் பரவி பல பல வியாதிகளுக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளுயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகள் அணுக வொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் விராம்வும் குணமனவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம். விலையோ சரசம்.

265 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ 1. 75 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 15 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

## எஸ். வைத்தியா அண்டு கோ,

மதராஸ்.

பிராஞ்சிகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள் டாயிலட்கள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்திஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்

எங்கள் மதுரை ஏஜண்டு:—

V. சின்னிகிருஷ்ண நாயுடு,

ஸ்ரீகிருஷ்ண ராஜா அண்டு கோ, மேலக்கோபுர வீதி மதுரை.